# டிசிபி லிமிடெட்

CIN : U24200TN1971PLC005999

**பதிவு அலுவலகம்: எண்.4, கற்பகாம்பாள் நகர், மயிலாப்பூர், சென்னை-600 004**

**இணையதளம்:** www.tcpindia.com; **இ-மெயில்:** Chem@tcpindia.com

போன்: (044)-2499 1518; பேக்ஸ்: (044) 2499 1777

**டிசிபி லிமிடெட் நிறுவனத்தின் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (IEPF) மாற்றுவது பற்றிய அறிவிப்பு**

**2016-ம் வருடத்திய முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (ஆணையம், கணக்கியல், தணிக்கை, மாற்றுதல் மற்றும் திருப்பி தருதல்) விதிமுறைகளில் 6(3) விதிமுறையின் கீழ், IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு மாற்றப்படுவதற்கு தகுதி பெற்ற பங்குகளை கொண்ட டிசிபி லிமிடெட் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வெளியிடப்படுகிறது.**

7 ஆண்டு காலமாக அல்லது அதற்கும் மேலாக செலுத்தப்படாத / கோரப்படாத டிவிடெண்ட் தொடர்பான சமபங்குகள் 07.09.2016 முதல் அமலில் உள்ள 2016-ம் வருடத்திய முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (ஆணையம், கணக்கியல், தணிக்கை, மாற்றுதல் மற்றும் திருப்பி தருதல்) விதிமுறைகளின் படி ('விதிமுறைகள்') IEPF ஆணையத்திற்கு மாற்றப்படும் என்று இந்திய அரசின் கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சகம் (MCA) அறிவித்துள்ளது. 2018-19 நிதியாண்டின் போது 2010-11 நிதியாண்டு முதல் 2016-17 நிதியாண்டு வரை 7 ஆண்டு காலத்திற்கு செலுத்தப்படாத / கோரப்படாத டிவிடெண்ட் தொடர்பான சமபங்குகள் இறுதி தேதியான அதாவது 23.09.2018 தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் IEPF ஆணையத்திற்கு மாற்றப்படுவ்தற்கு தகுதி பெற்றவை ஆகும். மேலும் 2010-11 நிதியாண்டுக்கான கோரப்படாத டிவிடெண்ட் இறுதி தேதியான 23.09.2018 முதல் 30 தினங்களுக்குள் கம்பெனியால் IEPF ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

28.02.2017 மற்றும் 13.10.2017 தேதியிட்ட அறிவிக்கையின்படி கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சகத்தால் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட மேற்சொன்ன விதிமுறைகளின் படி இதர விஷயங்களுடன் சேர்த்து பங்குகளை மாற்றுவது தொடர்பான திருத்தப்படும் நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. பிசிக்கல் ப்டிவத்திலோ அல்லது எலக்ட்ரானிக் படிவத்திலோ வைத்திருக்கும் பங்குகளை IEPF ஆணையத்திற்கு மாற்றும் வகைக்காக IEPF ஆணையத்தின் டிமாட் கணக்குகள் தொடர்பாக கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சகம் பொது சுற்றறிக்கை எண். 11/06/2017 - IEPF தேதி: 16.10.2017ஐ வெளியிட்டுள்ளது.

மாற்றப்படுவதற்கு கடைசி தேதியான அதாவது 23.09.2018 தேதியில் இருந்து 30 தினங்களுக்குள் IEPF ஆணையத்திற்கு அவர்களது பங்குகளை மாற்றுவது தொடர்பாக தகவல்களை IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு மாற்றப்படும் தகுதி பெற்ற பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களுக்கு மேற்சொன்ன சட்ட விதிமுறைகளின் 6(3) விதிமுறையின் கீழ் கடிதத்தை தனித்தனியாக தகவல்களாக கம்பெனியானது அனுப்பியுள்ளது. IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு மாற்றப்படும் தகுதி பெற்ற பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களின் பெயர்கள், அவர்களது குறியீட்டு எண் அல்லது DP ID / Client ID ஆகிய விவரங்களுடன் கம்பெனியின் இணையதளமான www.tcpindia.com என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்கள் அனுப்பப்பட்ட பங்குதாரர்கள் இதனை அவர்களுக்கு வழங்கப்படும் கடைசி வாய்ப்பாக கருதி பயன்படுத்திக்கொள்ள்லாம். (இது தொடர்பாக தகவல்களை பெற்றுக்கொள்ளாத பங்குதாரர்கள் தயவு செய்து கம்பெனியின் இணையதளத்தில் அவர்களது பெயர்களை அறிந்துகொள்ளலாம்) குறிப்பிடப்பட்ட தேதியான 23.09.2018 தேதிக்கு முன்பாக பங்குதாரர்கள் அவர்களது பங்குகள் மீதான கோரப்படாத டிவிடெண்ட் தொகையை திரும்ப கோரலாம். 2010-11 நிதியாண்டு முதல் 2016-17 நிதியாண்டு வரை கோரப்படாத டிவிடெண்ட்டுகள் தொடர்பான பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் அதனை கம்பெனியில் இருந்து திரும்ப பெற கோரியுள்ளனர். அவைகள் 2018-19 நிதியாண்டின் போது IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு மாற்றப்பட மாட்டாது.

IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு மாற்றுவது தொடர்பாகவும், டிமாட் படிவத்திற்கு மாற்றும் வகைக்காகவும், பிசிக்கல் படிவத்தில் கம்பெனியின் பங்குகளை வைத்திருக்கும் மற்றும் IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு மாற்றுவதற்கு தகுதி பெற்ற பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் அவர்களிடம் உள்ள ஒரிஜினல் பங்கு சான்றிதழ்களுக்கு பதிலாக புதிய பங்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதை அவர்கள் அறியவும். இதன் விளைவாக பங்குதாரர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரிஜினல் பங்கு சான்றிதழ்கள் தாமாகவே ரத்தாகிவிடும். அவைகள் மாற்றத்தக்கதல்ல. டிமாட் படிவத்தில் உள்ள பங்குகள், IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு மாற்றப்படும் தகுதி பெற்ற பங்குகள் ஆகியவை குறித்து கம்பெனியால் கார்ப்பரேட் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பங்குதாரர்களின் டிமாட் கணக்கில் இருந்து IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு மாற்றுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் இதன் தொடர்ச்சியாக இந்த பங்குகளுக்குரிய எதிர்கால டிவிடெண்ட்டுகளும், IEPF ஆணையத்தில் வரவு வைக்கப்படும்.

IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு இது போன்ற மாறுதல் / பங்கு மாற்று தொடர்பாக கம்பெனிக்கு எதிராக உரிமைகோரல் எதுவும் மேற்கொள்ள இயலாது. இந்த பங்குகளுக்கான கோரப்படாத டிவிடெண்டுகள் IEPF ஆணையத்திற்கு மாற்றப்படும். இத்தகைய பங்குகள் தொடர்பாக ஏதேனும் இதர பலன்கள் இருப்பின் அவைகள் மற்றும் அறிவிக்கப்பட்ட டிவிடெண்டுகள் உள்ளிட்டவை IEPF ஆணையத்தின் டிமாட் கணக்கிற்கு மாற்றப்படும் என்பதை பங்குதாரர்கள் அறியவும். IEPF ஆணையத்தில் இருந்து குறிப்பிடப்பட்ட விதிமுறைகளின் படி நடைமுறைகளை பின்பற்றி பங்குதாரர்கள் தங்களது பங்கிற்கான உரிமையை கோர இயலும்.

இது தொடர்பாக பங்குதாரர்களுக்கு ஏதேனும் விசாரணைகள் இருப்பின், கம்பெனியால் நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை பங்குதாரர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளலாம். மற்றும் கம்பெனியின் இணைய தளத்தில் அந்த அதிகாரி பற்றிய முழு விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்குமாற்று ஏஜெண்ட் M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சுப்பிரமணியன் பில்டிங், எண்.1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002, போன்: 044-2846 0390 (5 லைன்ஸ்) / பேக்ஸ்: 044-2846 0129 / இ-மெயில்: investor@cameoindia.com ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

**இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி**
**டிசிபி லிமிடெடுக்காக**
**ரவிசெல்வராஜன்**
**கம்பெனி செயலாளர் மற்றும் DGM - நிதி**

**இடம்: சென்னை**
**தேதி : 17.05.2018**

**MALAI SUDAR DATED 18th MAY 2018**